# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 1225/2016/பே-2

ஆணை எண்: 214/2017

நாள்: 24/08/2017

திரு. சி. ராஜவேலு,
தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை பணியாளர்கள் சங்கம்,
H-4, பாலார் கார்டன்,
சத்துவாச்சாரி, வேலூர் – 632 009.
வேலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
காவேரிபாக்கம் பேரூராட்சி,
காவேரிபாக்கம்,
வேலூர் மாவட்டம்.
மற்றும் இருவர். – எதிர் மனுதாரர்கள்

வேலூர் மாவட்டம், எச்.4, பாலார் கார்டன், சத்துவாச்சாரி, வேலூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. சி. ராஜவேலு, அவரது 29.11.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம் முறைமன்ற நடுவத்தில் 1/12/2016 அன்று பெறப்பட்டு எண். 1225/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு, உரிய ஆவணங்கள் மற்றும் வாக்கு மூலத்தின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம். திரு. சி. ராஜவேலு, தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை பணியாளர்கள் சங்கம், வேலூர் என்பவர் காவேரிப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் மீது கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

1. காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் பணியாற்றி வரும் திரு. N. ரமேஷ் என்பவர் கடந்த 02.03.1998-ல் 33 வயதில் துப்புரவு பணியாளராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனவும் அவரை பணி நீக்கம் செய்யுமாறும், சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.
2. தனியரது வயது வரம்பு தளர்வு செய்யப்பட்டதற்கு பதிவேட்டில் பதிவுகள் இல்லை.
3. அரசின் பணிநியமன தடையாணை இருந்தும் அரசு உத்தரவின்றி மீறி 2001-ல் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார் என்றும் இது அரசு விதிகளின்படி தவறானதாகுமெனவும் தெரிவித்து மேற்படி புகார்கள் மீது விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்முறையீடு குறித்து 15.12.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் காவேரிப்பாக்கம் செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை பெறப்பட்டது. 26.12.2016 நாளிட்ட தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.

" புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பணியாளர் திரு. என். ரமேஷ் என்பவர் வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட சேண்பாக்கம் பேரூராட்சியாக இருந்த போது பேரூராட்சிகள் ஆணையரின் செயல்முறைகள், ந.க.எண்.21379/1997-9-அ3, நாள்.17.10.1997ன் உத்திரவின்படி தொகுப்பு ஊதியத்தில் கால்வாய் தள்ளும் பணிக்கு பணியமர்த்தப்பட்டு, அப்போதைய சேண்பாக்கம் பேரூராட்சி, செயல் அலுவலரின் ந.க.எண்.1035/1997/அ1, நாள்:25.02.1998ன் உத்திரவில் பணியமர்த்தப்பட்டு, தனியர் 02.03.1998 முற்பகல் முதல் தொகுப்பூதியத்தில் சேண்பாக்கம் பேரூராட்சியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்துள்ளார். அதனைத் தொடர்ந்து, தனியர் தொகுப்பூதியத்தில் 02.03.1998 முதல் 01.03.2001 முடிய மூன்றாண்டுகள் துப்புரவு பணியாளர் பணி முடிவடைந்ததால், பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.14269/2001.அ3 நாள் 24.7.2001ன் உத்திரவு மற்றும் சேண்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் ப.மு.எண்.377/2001

நாள்:30.7.2001 உத்திரவின்படி, 02.03.2001ல் இப்பணியாளரை பணிவரன்முறை செய்து பணியாளரின் ஊதியத்தை தொகுப்பூதியத்திலிருந்து 02.03.2001 முதல் ஊதிய ஏற்ற முறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளார்.

சேண்பாக்கம் பேரூராட்சியாக இருந்தபோது தனியர் பணியில் சேர்ந்துள்ளார். கடந்த 2011ம் ஆண்டு முதல் சேண்பாக்கம் பேரூராட்சி வேலூர் மாநகராட்சியுடன் இணைந்துள்ளது. மாநகராட்சியுடன் இணைந்த பேரூராட்சிகளில் பணிபுரிந்த அரசு நிலையாக்கப்பட்டதீ பணியாளர்கள் மீள பேரூராட்சித்துறைக்கு செல்ல விருப்பம் தெரிவித்துள்ளதன்பேரில் அவரவர் பணிகளுக்கேற்ப பேரூராட்சியில் உள்ள காலிப்பணியிடங்களில் அந்தந்த பணியாளர்கள் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3238/2012 அ3, நாள்:18.4.2012ன் உத்திரவின்படியும், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1289/2010/ஆ, நாள்:29.4.2012ன் உத்திரவின்படியும் பணியிடம் மாற்றம் செய்யப்பட்டு தனியர் காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் 30.4.2012ம் தேதி முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியரின் பணிநியமனம் செய்யப்பட்ட இடமான முன்னாள் சேண்பாக்கம் பேரூராட்சி தற்போது வேலூர் மாநகராட்சியுடன் இணைந்து நான்காவது மண்டலத்தில் மாற்றம் செய்யப்பட்டதால், காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் தனியரின் பணி நியமனம் குறித்த கோப்பு இல்லாத நிலையில் பணிப்பதிவேட்டின் பதிவுகளின் அடிப்படையில் மேற்காணும் விவரங்கள் குறித்து மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அம்மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச்சட்டம் - 2005ன் மனுவினை பேரூராட்சியின் ந.க.எண்.156/2016 நாள் 18.8.2016ம் தேதிய பதிவு அஞ்சல் கடிதம் மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைத்து பணிநியமனம் குறித்த தகவலை மனுதாரருக்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டு மனுதாரருக்கும் நகலிடப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிடும் பணியாளர் (திரு. என். ரமேஷ், துப்புரவு பணியாளர்) இப்பேரூராட்சியில் பணி நியமனம் செய்யப்படவில்லை பணியிடம் மாற்றம் பெற்று வந்துள்ளார். தனியரின் பணிப்பதிவேடு மட்டுமே இப்பேரூராட்சியில்

உள்ளது. அதன் பதிவுகளின் அடிப்படையில் மனுதாரரின் மனுக்களுக்கு இவ்வலுவலக கடிதங்கள் மூலம் மனுதாரருக்கு ஏற்கனவே தகவல் அளிக்கப்பட்டுள்ளது என்று செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இப்புகார் மனு தொடர்பாக முறைமன்ற நடுவம் அழைப்பாணை வாயிலாக 6.2.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையிட்டு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

திரு. ரமேஷ் என்பவர் காவேரிபாக்கம் பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக 2.3.1998ல் அவருக்கு 33 வயது பணியில் அமர்த்தப்பட்டார். அவர் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பை சேர்ந்தவர். அத்தகைய அரசாங்க விதிகளின்படி இந்த வயது நிர்ணயிக்கபட்ட வயதைவிட கூடுதல் வயதாகும். பணி நியமனம் செய்ய தடை ஆணை 2001ல் நடைமுறையில் இருந்தது. அவரை 2001ம் ஆண்டு பணி நிரந்தரம் செய்துள்ளார்கள். இது அரசு விதிகளுக்கு புறம்பானதாகும்.

அரசாணை நிலை எண்.84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.21.5.1998, அரசாணை நிலை எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 5.5.1998 மற்றும் அரசாணை நிலை எண்.108, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.28.10.1998 மற்றும் அரசாணை எண்.60 நாள்: 23.8.2006. ஆகியவற்றில் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி சிறப்பு சிற்றூராட்சிகள் நிர்வாகத்தில் தொகுப்பூதியத்தில் பணிபுரிபவர் 1541 துப்புரவுப் பணியாளர்கள், 1182 குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள், 200 மின் பணியாளர்கள் ஆகிய 2923 பணியாளர்களை இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள அந்தந்த பதவிக்கு எதிரே குறிப்பிட்டுள்ள கால முறை ஊதியத்தில் கொண்டு

வருமாறு சிறப்பு சிற்றூராட்சிகள் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இந்நேர்வில் கூறப்படும் தொகுப்பூதியப் பணியாளர் ஊதியம் ஊராட்சி சுழற்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். அரசாணை நிலை எண் 60 சிறப்பு ஊராட்சிகள் துறை நாள்.23.8.2006ல் அரசாணையின் படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆணைகளுக்கு புறம்பாக அவர் பணி நிரந்தரம் செய்யப்பட்டார். என்னிடம் அந்த முழுவிவரத்திற்கான பட்டியல் இல்லை. எனவே விதிகளை மீறி அரசு போட்ட அரசாணை மீறி மேலே குறிப்பிட்ட நியமனங்கள் மற்றும் பணி நிரந்தரம் செய்யப்பட்ட ஆணை குறித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். திரு. ரமேஷ் என்பவர் கால்வாய் சுத்தம் செய்யும் பணியை செய்து வந்தார். அப்பொழுது அவருக்கு வழங்கப்பட்டது தினக் கூலியா அல்லது தொகுப்பூதியமா என்று கேட்டதற்கு பணி நியமன கோப்பு தன்னிடம் இல்லை எனவும் வேலூர் மாநகராட்சியில் பணி நியமன கோப்பு கொடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டார். ஆனால் வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் சம்பந்தப்பட்ட நபருடைய கோப்பு ஒப்படைக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார். திரு. ரமேஷ் என்பவருடைய கோப்பு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் கேட்ட பொழுது இவ்வாறு பதில் கொடுத்துள்ளார்கள்.

திரு. ரமேஷ் என்பவர் மேல் அதிகாரிகளுக்கும் பேரூராட்சிக்கும் இடையே பாலமாக இருந்து செயல்பட்டு வருகிறார். கோப்புகள் காணாமல் போவதற்கு வாய்ப்புகள் உள்ளது. எனவே உரியநடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் ....." எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக மனுதாரரின் வாக்கு மூலம் மற்றும் காவேரிப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வில் வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் துப்புரப் பணியாளராக திரு. N. ரமேஷ் என்பவர் 02.03.1998-ல் 33 வயதில் (அதிகப்பட்சம் 30 வயது என உள்ள நிலையில்) அரசாணைக்கு புறம்பாக பணி அமர்த்தப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு குறித்து விளக்கம் ஏதும் அளிக்கப்படவில்லை. மேற்படி பேரூராட்சி தற்போது வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள நபருக்கு 1998–ல் பணிநியமனமும் 2001–ல் பணி வரன் முறையும் செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் ஐந்து (5) ஆண்டுக்களுக்கு மேற்பட்டவை என்பதால் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (c)ன் படி இம்முறைமன்ற நடுவ விசாரணைக்குட்படுத்திடலாகாது என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும், மனுதாரர் சம்பந்தப்பட்ட துறைத் தலைமைக்கு மனு செய்து உரிய தீர்வு காணலாம் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24–ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு.சி. ராஜவேலு,
   தமிழ்நாடு அரசு அனைத்துறை பணியாளர்கள்சங்கம்,
   எச். 4, பாலார் கார்டன்,
   சத்துவாச்சாரி, வேலூர் – 632 009.

2. செயல் அலுவலர்,
   காவேரிப்பாக்கம் பேரூராட்சி,
   காவேரிப்பாக்கம்,
   வேலூர் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம்,
   சென்னை – 600 005.

4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம், சென்னை – 600 108.